**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 131/2019**

2025-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023-ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.09.2025 | தகப்பனார் பெயர்: | தட்சிணாமூர்த்தி |
| பெயர்: | விகோத் (எ) ராமநாதன் (DW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | திருவெண்காடு | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 39/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :10.09.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்-12.55)**

1. வாதிகளை எனக்கு தெரியும். வாதிகள் மூத்த குடிமக்கள் என்பதால் சென்னையிலும் சீர்காழியிலும் மாறி மாறி இருப்பார்கள் என்றால் சரிதான். நான் திருவெண்காடு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் அர்ச்சகராக கடந்த 10 வருடங்களாக பணி புரிகிறேன். முதல் பிரதிவாதி சுமார் 40 வருடங்களாக திருவெண்காடு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் அர்ச்சகராக பணிபுரிந்து VRS வாங்கிவிட்டார். பிராதில் வாதிகள் சொல்லியுள்ள சொத்து விபரங்கள் சரியாக உள்ளனவா என்றால் A, B ஷெடியூல் சொத்துக்கள் சரியாக உள்ளது, C ஷெடியூல் சொத்தில் நான்கெல்லை மாறியுள்ளது.

2. C ஷெடியூல் சொத்து எனது தகப்பனார் எனக்கு செட்டில்மெண்ட்

எழுதிவைத்தது, அளக்கும்போது பார்த்ததுதான், அதன் அளவு தற்போது ஞாபகமில்லை. C ஷெடியூல் சொத்தில் தென்வடல் 192 அடி, கிழமேல் 4 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது சரியான அளவு இல்லை, அதில் சந்து குறுக்காக வரும். 1ம் வாதி கடந்த 17.06.1982 தேதியிட்ட ராஜாமணியிடமிருந்து A schedule சொத்தை பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் கிரயம் பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியும். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3. தாவா சொத்துக்கள் கீழ சன்னதி தெருவில் வடசரகில் அமைந்துள்ளன என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் அதன் பழைய சர்வே எண்–135/1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் தெருவுக்கு வடக்கு, ராமமூர்த்தி வீடு மனைக்கு மேற்கு, பக்கிரிசாமி வீடு மனைக்கு கிழக்கு, ராமலிங்கம் காலி மனைக்கு தெற்கு என்று நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் நத்தம் ஜாரி வகைப்பாட்டை சேர்ந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் மொத்த கிரயம் 9 செண்ட் என்றால் சரிதான். 1ம் வாதி தாவா சொத்தில் A schedule சொத்தை வாங்கும்போது அதில் வீடு இருந்தது, அதன் கதவு எண்–2/67 என்றால் சரிதான்.

4. B schedule சொத்தை 2ம் வாதி கடந்த 10.04.1990ல் பாலகிருஷ்ணன், ராமலிங்கம் என்பவரிடமிருந்து வாங்கினார் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதன் வகைப்பாடு நத்தம் என்றாலும் சரிதான். அதன் சர்வே எண்–135/1 என்றால் சரிதான். அதில் 4 செண்ட் இடம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து 1ம் வாதியின் சொத்திற்கு வடக்கில் உள்ளது,

ராமமூர்த்தி மனைக்கு மேற்கில் உள்ளது, ராமலிங்கம் சொத்திற்கு கிழக்கில் உள்ளது, தூத்துக்குடி அம்மாள் மனைக்கு தெற்கு என்றால் வடக்கு, மேற்கு, கிழக்கு எல்லை சரிதான், ஆனால் தூத்துக்குடி அம்மாள் என்ற பெயரில் அங்கு இடம் கிடையாது, அந்த இடம் அம்மன் சன்னதிக்கான (தொண்டி) பொது வழி.

5. நான் சொல்வதுபோல் அந்த இடம் பொது வழி கிடையாது என்றால் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு தென் பக்கம் காம்பவுன்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 13.21)**